தெங்கு பயிர்ச்செய்கை சபை - 2018
-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்
---------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
------------------------------------------------------------

தெங்கு பயிர்ச்செய்கை சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை
------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியானதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்
------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு ஆளுகையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 07 ஆம் இலக்க நியமத்தின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டு பயன்படுத்தி வரப்படு கின்ற ரூபா 23,939,251 கிரயம் கொண்ட கட்டிடங்கள் மூலதனமாக்கப்படாது முடிவுறா வேலைகள் கணக்கில் காண்பிக்கப்பட் டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் அத்தொகையால் நிதிக் கூற்றுக்களில் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், சபையின் பெறுமானத்தேய்விடல் கொள்கை யின் படி அச் சொத்துக்கள் தொடர்பில் ரூபா 1,242,124 பெறுமானத்தேய்வுச் சீராக்கமம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள் | நிர்மாண வேலைகள் பூரணப் படுத்தப்பட்டிருந்த போதிலும், வேலை முடிவுறுத்தல் தொழில் நுட்ப அறிக்கை சமர்ப்பிக்கப் படாமை, முற்பணத்தை தீர்ப்ப தற்கான பட்டியல்கள் சமர்ப்பிக் கப்படாமை மற்றும் இறுதிப் பட்டியலைத் தயாரித்து நிதிப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதில் காணப்பட்ட தாமதம் போன்றன காரணமாக குறித்த பெறுமதி முடிவுறா வேலைகள் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு அவை பயன்படுத்தப் பட்டு வருவதனால் துரிதமாக அந்த அறிக்கைகளைப் பெற்று நியமத்தின் பிரகாரம் அச்சொத்து க்கள் கணக்கீடு செய்யப்பட்டு அவற் றின் மீது சரியான முறையில் பெறுமா னத்தேய்வை கணிப்பி |

| | | |
|---|---|---|
| ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகை யால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்களிற்கிடையே இடம் பெறுகின்ற கொடுக்கல் வாங்க ல்கள் நிறைவுற்றிருக்காமையால் பெறுமானத்தேய்வுச் சீராக்கம் 2018.12.31 இல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ட்டு நிதிக்கூற்றுக்க ளில் காட்டுதல் வேண்டும். |
| (ஆ) நியம இல. 18 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களை முதல்முறையாக இனங்காண்கையில் சந்தைப் பெறுமதியிலிருந்து விற்பனைக் கிரயத்தினைக் கழித்து வரும் பெறுமதியில் இனங்காணப்பட வேண்டிய போதிலும், உயிரியல் செத்துக்கள் என ரூபா 28,545,410 கிரயப் பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தெங்கு பயிர்ச்செய்கை சபைக்குச் சொந்தமான 12 மாதிரி தென்னந் தோப்புகளில் பசு மற்றும் எருமை வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் செம்பறி ஆடு வளர்ப்பு போன்ற செயற்திட்டங்கள் இடம்பெறுகின் றன. 2018.12.31 இல் உள்ள வாறான இந்த கால்நடைகளின் இருப்பு சந்தைப் பெறுமதி மற்றும் நியாயப் பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறும தியில் மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இல. 18 இன் படி சந்தைப் பெறுமதியிலிருந்து விற்பனைக் கிரயத்தினைக் கழித்து வரும் பெறுமதியில் இருப்பு பெறுமதி யிடப்படவில்லை. ஏதிர்வரும் ஆண்டில் சரியான முறையில் இருப்பினை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சந்தைப் பெறுமதியி லிருந்து விற்பனைக் கிரயத்தினைக் கழி த்து வரும் பெறுமதி யில் உயிரியல் சொத்துக்களை முத ற்தடவையாக பெறும தியிட்டு நிதிக்கூற்று க்களில் காட்டுதல் வேண்டும். |
| நியம இல. 19 இன் பிரகாரம் ஊழிய நலப் பணிக்கொடை கணிப்பீட்டிற்காக ஆயுள் மதிப்பீட்டு முறை (Acturial Valuation Method) காலந்தோரும் செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான ஆயுள் மதிப்பிடுதல் ஒன்றை மேற்கொள்ளாது ரூபா 125,707,535 தொகை பணிக்கொடை ஏற்பாடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தெங்கு பயிர்ச்செய்கை சபை யின் ஊழியர் நல பணிக் கொடைக் கணிப்பீடு இதுவரை மேற்கொள்ளப்பட்டு வரப்பட்ட முறையிலேயே 2018.12.31 இலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 19 இன் பிரகாரம் ஊழிய நலப் பணிக்கொடையினைக் கணிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | நியமத்தின் பிரகாரம் ஆயுள் மதிப்பீட்டு முறையின் அடிப்படை யில் ஊழியப் பணிக் கொடையினைக் கணிப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பி த்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 08 ஊழியர்களிற்கான ரூபா 919,002 தொகையான பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமை காரணமாக ஆண்டிற்கான இலாபம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2018.12.31 இல் உள்ளவாறு மாதிரித் தென்னந் தோப்புகளில் பணிக் கொடை ஏற்பாட்டு பதிவேட்டைத் தயாரிக்கையில் தவறு காரணமாக ஏற்பாடு செய்யப்பட வேண்டிய பணிக்கொடை ஏற்பாடு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற் கமைய, மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 919,002 ஆல் குறைவடைந்துள்ளது. அத்தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க ப்படும். | பணிக்கொடை ஏற்பாடு சரியாக கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இருப்புக் கணிப்பீட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள வாறான பொலிபேக் இருப்பின் பெறுமதி ரூபா 15,009,488 ஆன போதிலும், அப்பெறுமதி ரூபா 13,799,888 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ஆண் டின் இலாபம் ரூபா 1,209,600 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இத்தவறைத் திருத்துவதற்கு நடவடி க்கை எடுக்கப்படும். | இருப்புக் மதிப்பீட்டை திருத்தமாகக் கணிப்பி ட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். |
| (இ) காசற்ற அசைவுகளின் கீழ் வருமானத்தை கூடுதலாகச் சீராக்கி யமை, வரி ஏற்பாட்டையும் செலுத்திய வரியினையும் சரியாக சீராக்கியிருக்காமை என்பன காரண மாக காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 12.2 மில்லியன் குறைத்தும் தொழிற்படு மூலதன மாற்றத்தினை சரியாக சீராக்கியிருக்காமை காரணமாக அதன் மூலம் உருவாகின்ற தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 39.2 மில்லியன் அதிகரித்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந் தது. அதன் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருதிப் பட முடியவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்றில் காசற்ற அசைவுகளின் கீழ் சீராக்கப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,369,060 எனவும் வரி ஏற்பாடு ரூபா 34,216,849 எனவும் செலுத்திய வரி ரூபா 8,507,424 எனவும் காண்பிக் கப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக வேறு தொகைகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டுள்ள இத்தவறைத் திருத்து வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் கடன்பட்டோர் அதிகரித்தல் மற்றும் கடன்கொடுத்தோர் அதிகரித் தல் என்பன முறையே ரூபா 15,513,746 மற்றும் 38,695,432 ஆன போதிலும், வேறு தொகைகள் சீராக்கப்பட்டுள்ளமையால் ஏற்பட்டு ள்ள இத்தவறைத் திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படும். | காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கை யில் அதனைத் திருத்த மாகத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை | கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| கடன்பட்டோர் | 161,268,836 | மீதி உறுதிப்படு த்தல் கடிதம் | வருடாந்த கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்ப டுத்துவதற்கான கடிதங்கள் உரிய தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்பட் டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டில் விடயத்திற்குப் பொறுப் பாக கடமையாற்றிய முகாமைத்துவ உதவியாளர் பிரசவ விடுமுறை பெற்றுச் சென்றிருந்தமையால் இப்பணி உரியவாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இத்தவறைத் திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளின் உறுதிப்ப டுத்தலை நேரடியாக கணக்காய்விற்கு மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| கடன்கொடுத்தோர் | 299,633,612 | | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாதிரித் தென்னந் தோப்புகளிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 2,308,029 தொகையும் தங்குமிடங்களிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 4,596,475 தொகையும் 5 ஆண்டுகள் கடந்திருந்திருந்த போதிலும் அவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு முதல் மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் அலுவலகங்களால் திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த தென்னங் கன்றுகளிற்காக முறையே ரூபா 150,500 மற்றும் ரூபா 4,445,975 சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் இல்லாதொழிந்தமையால் மாவட்டச் செயலகங்களிலிருந்து இப்பணத்தை அறிவிட முடியாது போயிருந்தது. அமைச்சினதும் பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்தைப் பெற்று இத்தொகையினைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலமாகக் காணப்படுகின்ற பெற வேண்டிய தொகைகளை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) கிலிரீசீடியா செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,742,150 மற்றும் பெருந்தோட்ட உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 900,000 தொகைகள் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்டதாகக் காணப்பட்ட போதிலும், அதனைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மாதிரித் தோப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிலிரீசிடியா பயிரிடும் செயற்திட்டத்திற்காக Crystel Lanka (Pvt) Ltd. இடமிருந்து கிடைத்திருந்த ரூபா 2,742,150 தொகை அச்செயற்திட்டம் முடியும் வரை சபையின் பொறுப்பாகக் காணப்படுகின்றமையால் நிதிக்கூற்றுக்களில் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இச்செயற்திட்டம் தற்போது முடிவடைந்துள்ளதுடன், இத்தொகையினை எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே பெருந்தோட்ட உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ரூபா 900,000 தொகையினை எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய தொகைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன், அவ்வாறில்லையாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 570 மற்றும் 571 | 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 110,500 கேள்விப்பண வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 110,500 கேள்விப்பண வைப்புக்கள் தொடர்பில் தேடியறிந்து எதிர்காலத்தில் வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகாலமாக காணப்படுகின்ற கேள்விப்பண வைப்பு தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 14,885,097 மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 20,936,962 ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 35,822,059 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மூலதன மற்றும் மீண்டுவரும் மானியம் அதிகரித்திருந்தமையும் அபிவிருத்திச் செலவினம் குறைவடைந்தமையுமே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றிற்கான பிரதான காரணிகளாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையின் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக ரூபா 56,115,671 கிரயத்தில் மேலுமொரு பகுதியை நிர்மாணிப்பதற்கான வேலைகள் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த துடன், இந்த நிர்மாணிப்பிற்காக ஒப்பந்த காரருடன் உடன்படிக்கை யில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் கட்டிட நிர்மாணித்தலிற்காக உரிய நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>இந்த நிர்மாணிப்பிற்காக இதுவரை ரூபா 14,388,275 செலவிடப்பட்டிருந்த போதிலும், அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏறத்தாழ ஒரு வருடம் தாமதமடைந்திருந்தமை காரணமாக ஒப்பந்த காரர் ஆரம்பத்தில் இணங்கியிருந்த தொகைக்கு நிர்மாணத்தினை மேற்கொள்ள முடியாதிருந்தமையால் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படாது இடையில் நிறுத்தப்பட்டிருந்தன. | 2014 ஆம் ஆண்டில் தேவையான நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் நிதி ஏற்பாட்டிற்கமைய ரூபா 7,000,000 தொகையினையே சபைக்கு இதற்காக ஒதுக்க முடிந்திருந்தமையால் குறித்த வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. 2015 ஆம் ஆண்டிலும் இதற்காக ரூபா 6,881,850 தொகை ஒதுக்கப்பட்டிருந்தமையால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிர்மாண வேலைகளிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட தாமதம் காரணமாக ஒப்பந்த காரருடன் 2018.01.16 ஆந் திகதி மீண்டும் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டிய தேவை தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு ஏற்பட்டிருந்தது.<br><br>அதற்கமைய, நிர்மாண வேலைகள் மாத்திரம் ஒப்பந்த காரரால் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும், ஒட்டுமொத்த நிர்மாண வேலைகளில் முன்னேற்றம் காணப்படாமையால் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள் வதற்கு சபை தீர்மானித்தது. அதன்படி, தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்ற முன்பக்க வேலைகளை பூரணப்படுத்துவதற் காக மூன்று மாதங்கள் தேவைப்படுமென 2019.07.01 ஆந் திகதி ஒப்பந்த காரரின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய நிறுவனங்களிட மிருந்து பெறப்பட வேண் டிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே ஒப்பந்தக் கையளித்தல் நடவடிக் கைகளை மேற்கொள்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கதிர்காமம் சுற்றுலா விடுதி நிர்மாணத்துடன் தொடர்புடைய ஒப்பந்தத்தின் பிடி காசினை குறைபாடுகளை அறிவிப்பதற்கான கால முடிவில் ஒப்பந்த மதியுரைஞரின் பரிந்துரையின் மீது விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், மதியுரைஞரின் பரிந்துரையின்றி குறைபாடுகளை அறிவிப்பதற்கான காலம் முடிவடையும் முன்னரே சபையினால் 75 சதவீதம் அல்லது ரூபா 562,808 விடுவிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இனங்காணப்பட்டி ருந்த குறைபாடுகளை ஒப்பந்த காரர் பூரணப்படுத்தாமையால் இதற்கான தொகையினை அறவிடுவதற்கு பிடி காசு போதுமானதாக இருக்கவி ல்லை. | இதுவரை சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்ட பின்னரே எஞ்சிய பிடி காசு விடுவிக்கப்படுமென E/7/CONS/ RENO/KATHARA ஆம் இலக்க 2019.03.25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஒப்பந்த காரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதுவரை எவ்வித நிர்மாண வேலைகளும் மேற்கொள்ளப் படாமையால் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஒப்பந்த காரரின் பிடி காசினை விடுவிக்கையில் குறித்த மதியுரைஞரின் பரிந்துரையின் மீது அதனை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) நியதிகளுடன் இணக்கமுறாத பொலிபேக் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 450,000 மற்றும் ரூபா 200,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன். இந்த பொலிபேக் இனை களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எமுடுத்திருக்காமையால், புதிதாக கொள்வனவு செய்யப்படுகின்ற பொலிபேக் இனை பாதுகாப்பாக பொதிசெய்வதற்கு களஞ்சிய வசதி காணப்படாமை அவதானிக்கப்பட்டது. | ஏறத்தாழ 450,000 பொலிபேக் 2 உறைகள் வீதம் சேர்க்கப்பட்டு அதனுள்ளே தென்னங் கன்றுகளை உற்பத்திசெய்வதற்கு திணைக்கள பேரளவு கொள்வனவுச் சபை தீர்மானித்திருந்தமையால் அவ்வாறு தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வதற்காக அந்த பொலிபேக் இனை பயன்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>களஞ்சியத்திலுள்ள 200,000 பொலிபேக் இனை அகற்றுமாறு குறித்த நிறுவனத்திற்கு பல விடுத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. | புதிதாக பொலிபேக் கொள்வனவு செய்யப்ப டுவதற்கு முன்னர் நியதிகளிற்கு முரணான பொலிபேக் இனை களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்கு முகாமை த்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) மாஹயாய மாதிரித் தென்னந் தோப்பில் காணப்படுகின்ற 25 தேக்கு மரங்களை விற்பனை செய்வதற்காக இரண்டு தடவைகள் கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், அதன்போது முதலாவது கூறுவிலை கோரப்பட்ட வேளையில் பொருத்தமான கொள்வ னவாளர் ஒருவரைத் தெரிவுசெய்வ தற்கு சந்தர்ப்பம் காணப்பட்டிருந்த போதிலும், மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. இருப்பினும் இரண்டாவது தடைவ கூறுவிலை கோரப்பட்டு தெரிவுசெய்யப்பட்டிருந்த கொள்வனவாளர் பின்னர் இந்த தேக்கு மரங்களை கொள்வனவு செய்வதற்கு முன்வந்திருக்காமை யால் இதற்காக செய்யப்பட்டிருந்த ரூபா 172,120 செலவினம் பயனற்ற செலவாகியிருந்தது. இந்த வேலை கள் ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ 02 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், இந்த தேக்கு மரங்களை விற்பனை செய்வதற்கு முடியாது போயிருந்த மையால் சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 4,100,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மீண்டும் கூறுவிலை கோருவதற்கான கொள்வனவு நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக விலைமதிப் பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது டன், குறித்த பணிகள் முடிவடைந்த பின்னர் உரிய பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகின்றேன். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், உரிய முறையில் கொள் வனவு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த தேக்கு மரங்களை விற்பனை செய்வதற்கு துரிதமாக நடவக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) கம்பஹ பிரதேச செயலகத்தினால் 54,000 மைய்டா உறைகளை பயிர்ச்செய்கையாளர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், தேவையான மைய்டா உறைகளைப் பெற்று பகிர்ந்தளிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிரா மையால் பயிர்ச்செய்கையாளர் களிற்கு 9,950 மைய்டா உறைகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. அது 18.42 சதவீதம் மாத்திரம் என்பதனால் அப்பிரதேசத்தில் தெங்கு விளைச்சல் குறைவடைவத ற்கு அது காணரமாகியிருந்தது. | புதிய விலோபித மைய்டா தொழிற்சாலையொன்று கம்பஹா பிரதேச அலுவலகத்தில் 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தாபிக்கப்பட்டது. ஆண்டிற்குத் தேவையான மொத்த இலக்கிடப்பட்ட மைய்டா உறைகளை அதன் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்திருக்க வில்லை. அதன் காரணமாக, 2018 ஆம் ஆண்டிற்கான இலக்கினை முழுமையாக அடைய முடிந்திருக் கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ள இலக்கில் தற்போது 90 சதவீத செயன்முன்னேற்றம் அடையப்பட்டு ள்ளது. | பிரதேசத்தில் காணப்படு கின்ற மைய்டாவினைத் தடுப்பதற்காக பயிரிடு வோருக்கு தேவையான மைய்டா பொதிகளை பகிர்ந்தளிப்பதற்காக உரிய வேலைத்திட்ட மொன்றை தயாரித்து அதனை நடைமுறைப் படுத்துவதற்கு முகாமைத் துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) 2018 ஆம் ஆண்டில் கம்பஹ பிரதேச அலுவலகத்தின் தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் உப பயிர்களிற்கான இலக்கிடப்பட்ட மானியக் கொடுப்பனவு ரூபா 15,175,000 ஆன போதிலும், அந்த மானியத்திலிருந்து 2017 ஆம் ஆண்டிற்கான நிலுவை மானியம் செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய் வாண்டிற்கான மானியமாக தெங்கு பயிரிடுவோருக்கு ரூபா 7,244,978 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,930,022 நிலுவை மானியம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. இதற்கமைய பயிர்ச்செய்கைக்கான மானியம் உரிய காலவேளையில் கிடைக்காமயால் தெங்கு தெங்கு பயிரிடுவதற்கான ஆர்வம் விவசாயி களிடையே குறைவடைவதற்கு இது காரணமாகியிருந்தது. | 2017 ஆம் ஆண்டிற்கான நிலுவைக்கு புறம்பான நிதி ஏற்பாடு கிடைக்காமையால் 2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை மானியம் செலுத்தப்பட்டது. அதற்க மைய, 2018 ஆம் ஆண்டிற்கான மானியத்தில் நிலுவைக் கொடுப் பனவு ஏற்பட்டுள்ளது. மேலும், 2018 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப் பட்டுள்ள ரூபா 810 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 694 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந் தமை இந்த நிலமை மேலும் மோசமடைவதற்கு காரணமாகியி ருந்தது. | பயிரிடுவோர் தமது காணி களில் மேற்கொள்கின்ற பயிர்ச்செய்கைக்குத் தேவையான மானியத்தை அவர்களிற்கு துரிதமாக வழங்குவதற்கு முகாமை த்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினது பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) பிரதிப் பொது முகாமையாளர் (செயற்திட்ட அபிவிருத்தி) போன்ற பதவிகள் முறையே பிரதிப் பொது முகாமையாளர் 02 ஆண்டுகளும் 09 மாதத்திற்கும் மற்றும் 01 ஆண்டும் 11 மாதத்திற்கும் மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்தப் பதவிகளிற்கு நிரந்தர உத்தியோகத்தர் களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் குறித்த பதவிக ளிற்குரிய கடமைப் பொறுப்புக்களை வினைத்திறனாக மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. | தெங்கு பயிர்ச்செய்கை சபையினது பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) பிரதிப் பொது முகாமையாளர் (செயற்திட்ட அபிவிருத்தி) போன்ற பதவிகள் முறையே பிரதிப் பொது முகாமையாளர் 02 ஆண்டுகளும் 09 மாதத்திற்கும் மற்றும் 01 ஆண்டும் 11 மாதத்திற்கும் மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், அந்தப் பதவிகளிற்குரிய கடமைப் பொறுப்புக்கள் உதவிப் பொது முயாமையாளர் (நிதி முயாமைத்துவம்) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (மாதிரித் தென்னந் தோப்புகள் மற்றும் நாற்றுமேடை அபிவிருத்தி) ஆகியோ ரால் எவ்விதக் குறைபாடுகளுமின்றி உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளன. | சபையில் காணப்படுகின்ற பிரதான பதவிகளிற்கு நிரந்தர உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக் கை எடுத்தல் வேண்டும். |